கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **03.09.2025**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக்கல்வி வாயிலாக தென்னை தொழில்நுட்பத்தில் பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம் **2005**–ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இவ்வியக்ககத்தின் வாயிலாக பல தொலைதூரக் கல்வி பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி வாயிலாக நடத்தப்படும் பாடங்கள்

- சான்றிதழ் பாடங்கள்
- வேளாண் இடுபொருள் பட்டயப்படிப்பு
- பட்டயப்படிப்புகள்

திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் **44** வகையான ஆறுமாத கால சான்றிதழ் பாடங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. இதனை கற்போர் சொந்தமாகத் தொழில் தொடங்கி தொழில்முனைவோராகும் வண்ணம் பாடத்திட்டம் வரையறை செய்யப்பட்டுள்ளது. சான்றிதழ் பாடங்கள் அனைத்துமே செயல்முறை விளக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பயிற்சியாளர்களை செயல்முறை விளக்கங்களில் ஈடுபடுத்தி அனைத்து தொழில்நுட்பங்களையும் அறியச் செய்து அவர்களை சுயதொழில் மேற்கொள்பவராகவும், தொழில் முனைவோராகவும் உருவாக்குவதற்கு உறுதுணையாய் அமைகின்றன. இக்கல்வி இயக்ககத்தின் வழியாக இதுவரை சான்றிதழ் பாடங்கள் பயின்ற எண்ணற்றோர் சுயதொழில் புரிவோராகவும் தொழில் முனைவோராகவும் உருவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் குறிப்பாக தென்னை விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற சான்றிதழ் பாடம் மற்றும் தென்னை உற்பத்தி தொழில்நுட்பங்கள் என்ற பட்டயப்படிப்பும் தொலைதூரக் கல்வி வாயிலாக நடத்தப்பட்டு வருகிறது.

“கற்பக விருட்சம்” என்று அழைக்கப்படும் தென்னை உலகளாவிய விவசாயத்தில் மகத்தான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. உணவு பாதுகாப்பு, பொருளாதார நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை நிலைப்படுத்துகிறது. தென்னை உற்பத்தியில் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் ஒன்றான இந்தியா, பாரம்பரிய சாகுபடி நடைமுறைகளின் வளமான வரலாற்றைக்

கொண்டுள்ளது. இது நவீன அறிவியல் முன்னேற்றங்களுடன் இணைந்தால், உற்பத்தித்திறன் மற்றும் நிலைத்தன்மையை கணிசமாக மேம்படுத்த முடியும்.

தென்னை சாகுபடி தொழில்நுட்பம் என்ற இந்த சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்பானது பாரம்பரிய சாகுபடி முறையை அதிநவீன அறிவியல் முறைகளுடன் ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான வளமாகும். இது பல்வேறு வகையான இரகங்களைத் தேர்ந்தெடுப்பது, துல்லியமான ஊட்டச்சத்து மேலாண்மை, நவீன நீர்பாசன உத்திகள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை அம்சங்களை உள்ளடக்கியது. கூடுதலாக இடைவெளி, உரமிடல், மற்றும் தென்னையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் போன்ற தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளலாம். இந்த சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்பு பாடமானது விவசாயிகள், மற்றும் வேளாண் தொழில்முனைவோருக்கு ஒரு மதிப்புமிக்க கல்வி செல்வமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமில்லை. இந்த சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்பு பாடத் திட்டத்தில் மேன்பட்ட மகசூல் மற்றும் நிலைத்தன்மைக்கான மேம்பட்ட சாகுபடி நுட்பங்களை புரிந்து கொள்வதிலும் செயல்படுத்துவதிலும் தென்னை விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக செயல்படும்.

**தென்னை சாகுபடித் தொழில்நுட்பங்கள்: சான்றிதழ் படிப்பில் சேர்வதற்கான தகுதி விபரங்கள்**

| | | |
|---|---|---|
| **கல்வி தகுதி** | : | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி , தோல்வி |
| **பயிற்றுமொழி** | : | தமிழ் |
| **பயிற்சி வகுப்புகள்** | : | சனிக்கிழமை தோறும் , 5மாதங்கள்(6வது மாதம் - தேர்வு) |
| **வயது உச்சவரம்பு** | : | வயது வரம்பு இல்லை |
| **பயிற்சி கட்டணம்** | : | ரூ. 2500/- |

**தென்னை உற்பத்தித் தொழில்நுட்பங்கள்: பட்டயப் படிப்பில் சேர்வதற்கான தகுதி விபரங்கள்**

| | | |
|---|---|---|
| **கல்வி தகுதி** | : | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி |
| **பயிற்றுமொழி** | : | தமிழ் |
| **காலம்** | : | ஓராண்டு (இரண்டு பருவங்கள்) |
| **பயிற்சி வகுப்புகள்** | : | மாதம் ஒரு சனி மற்றும் ஞாயிற்றுகிழமை |
| **வயது உச்சவரம்பு** | : | வயது வரம்பு இல்லை |
| **பயிற்சி கட்டணம்** | : | ரூ. 20,000/- (இரண்டு பருவங்களுக்கு) |

**மேலும் விவரங்களுக்கு**

இயக்குநர்,
திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641003
# 9442111048/9489051046/0422-6611229
மின்னஞ்சல் odl@tnau.ac.in
இணையதளம் www. tnau.ac.in/odl/

**மக்கள் தொடர்பு அலுவலர்**